1979 மார்ச் 29] [திரு. தி. அன்பழகன்]

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், பாசன வசதிகள் எதுவும் இன்றி இருக்கக் கூடிய ஒரு பெரிய மாவட்டம். எனவே, இதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் மீண்டும் நாளை தொடர்ந்து நடைபெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(6) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

* 128. 1978 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்கு வரத்துக் கழகத்தின் 4-வது ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

† 101. 1978—79 ஆம் வருட நீர்பாசனம் மீதான மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது சட்டப் பேரவை /மேலவை உறுப்பினர்கள் அளித்த ஆலோசனைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

---

*. தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை விதிகளின் 21 (5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

† 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.